செ.வெ.எண். 370/2017 நாள்: 02.08.2017

**பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினையொட்டி பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெறும் கலை இலக்கிய போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டம் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினையொட்டி பள்ளிக்கல்வித்துறை சார்பில் வாலாஜாபாத் மாசிலாமணி முதலியார் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கலை, இலக்கிய போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் பேசியதாவது,

தமிழ்நாடு அரசின் சார்பில் மாவட்டங்கள் தோறும் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிய பேருந்து முனையம், கிளாம்பாக்கம், வண்டலூரில் 30.08.2017 அன்று மிக சிறப்பாக நடைபெறவுள்ளது. இன்று பள்ளிக் கல்வித்துறை சார்பில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பள்ளி மாணவ-மாணவிகளுக்கிடையே கலை இலக்கிய போட்டிகள் நடைபெறுகிறது. காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றியத்தில் உள்ள 27 நடுநிலைப் பள்ளிகள், 9 உயர்நிலைப் பள்ளிகள், 12 மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து ஏறத்தாழ 324 மாணவர்கள் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா ஒன்றிய அளவிலான கலை இலக்கிய போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள். உயர் தொடக்க நிலை பிரிவில் பேச்சு, கட்டுரை, ஓவியம் மற்றும் கவிதைப் போட்டிகளில் தலா 27 பேர் வீதம் பங்கேற்கின்றனர். உயர்நிலைப் பிரிவில் பேச்சு, கட்டுரை, ஓவியம் மற்றும் கவிதைப் போட்டிகளில் தலா 9 பேர் வீதம் பங்கேற்கின்றனர். மேல்நிலைப் பிரிவில் பேச்சு, கட்டுரை, ஓவியம் மற்றும் கவிதைப் போட்டிகளில் தலா 12 பேர் வீதம் பங்கேற்கின்றனர். போட்டியாளர்களை மதிப்பீடு செய்ய போட்டி பிரிவு வாரியாக மூன்று நடுவர் கொண்ட 15 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நடுவர் குழுவில் தொடக்க நிலை, உயர்நிலை, மேல்நிலை ஆசிரியர்கள் இடம் பெற்றுள்ளனர். ஒன்றிய அளவில் முதலிடம் பெறும் மாணவ-மாணவியர் நான்கு போட்டிகளிலும் 16 பேர் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் பங்குபெறுவர்.

இந்த ஊராட்சி ஒன்றிய அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெறும் மாணவ-மாணவிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைமையில் 30.08.2017 அன்று நடைபெறும் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றவர். மனிதர்களில் மாணிக்கமாக திகழ்ந்தவர். மாணவர்களுக்கு சத்துணவு திட்டத்தினை அளித்த பெருமகனார். அவருடைய விழாவினை கொண்டாடுவதில் நாம் அனைவரும் பெருமை அடைவோம். மாவட்டத்தில் கலை, இலக்கிய போட்டிகள் மட்டுமின்றி, விளையாட்டு போட்டிகள், பாடல், ஆடல், பரதம், குயிலாட்டம், இசைக் கச்சேரிகள், பேரணிகள் உட்பட பல்வேறு நிகழ்வுகள் மாவட்டம் தோறும் பிரமாண்டமான அளவில் நடைபெற உள்ளது. இவ்விழா சிறப்பாக நடைபெறுவதற்கு அனைத்து தரப்பு மக்களும் ஒத்துழைப்பு தரவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வாலாஜாபாத் பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், முன்னாள் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.காஞ்சி பன்னீர் செல்வம், முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.திருவளர்செல்வி, மாவட்ட கல்வி அலுவலர் (பொ) திரு.ராஜரத்தினம் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**